தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
19.05.2024

### விழுப்புரம் காவல் நிலையத்தில் போலீஸார் தாக்கியதாக சர்ச்சை

# கேன்டீன் ஊழியர் உடலை மறுபிரேத பரிசோதனை நடத்த உத்தரவு

- காவல் நிலைய கண்காணிப்பு கேமராவில் பதிவான பதிவுகளை பாதுகாக்கவும் அறிவுறுத்தல்

**சென்னை**

சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட கேன்டீன் ஊழியரை விழுப்புரம் போலீஸார் கண்மூடித்தனமாக தாக்கியதால் மரணமடைந்ததாக கூறி தொடரப்பட்ட வழக்கில், அவரது உடலை தோண்டியெடுத்து மறுபிரேத பரிசோதனை நடத்த விழுப்புரம் எஸ்பிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விழுப்புரம் பெரிய காலனியில் வசித்து வந்தவர் கே.ராஜா (43). இவர் விழுப்புரம் திருப்பாச்சாவடிமேடு பகுதியில் கார்த்திக் என்பவரின் கேன்டீனில் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் அந்தப் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை முன்பாக நின்று கொண்டிருந்த ராஜா மதுபாட்டில்களுடன் சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறி கடந்த ஏப்.10 அன்று காலை ராஜாவை விழுப்புரம் தாலுகா போலீஸார் கைது செய்தனர்.

பின்னர் அவரை காவல் நிலையத்தில் வைத்து போலீஸார் லத்தி மற்றும் பூட்ஸ் கால்களால் கண்மூடித்தனமாக கடுமையாக தாக்கியதாக கூறப்படுகிறது. அன்றைய தினமே போலீஸாரால் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட அவர் வலியால் துடித்துள்ளார். அவரது உடல்நிலை மேலும் மோசமானதால் மனைவியும், உறவினர்களும் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கெனவே ராஜா இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். அதன்பிறகு அவரது உடல் அவசர அவசரமாக பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு புதைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது கணவரின் இறப்பில் மர்மம் இருப்பதால் உடலை தோண்டியெடுத்து வேறு மருத்துவ நிபுணர்கள் முன்னிலையில் மறுபிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட வேண்டும் எனக்கோரி இறந்த ராஜாவின் மனைவி அஞ்சு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.



கே.ராஜா

அதில், தனது கணவரின் உடலை அவசர கதியில் பிரேத பரிசோதனை செய்து தன்னிடம் ஒப்படைத்த போலீஸார் தகனம் செய்ய வற்புறுத்தியதாகவும், தங்களது குடும்ப வழக்கப்படி அடக்கம் செய்த நிலையில், அந்த உடலை தோண்டியெடுத்து தகனம் செய்ய மிரட்டியதாகவும் கூறியுள்ளார்.

எனவே விழுப்புரம் தாலுகா காவல் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை பத்திரப்படுத்தவும், இதுதொடர்பாக நீதி விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஆர். சக்திவேல் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஹென்றி திபேன் ஆஜராகி, போலீஸார் லாக்-அப்பில் வைத்து அடித்து சித்ரவதை செய்த காரணத்தாலேயே மனுதாரரின் கணவர் இறந்துள்ளார்.

ஆகவே அவரது உடலை தோண்டியெடுத்து மறு பிரேத பரிசோதனை நடத்த உத்தர விட வேண்டும், என வாதிட்டார்.

அரசு தரப்பில் ஆஜரான குற்றவியல் வழக்கறிஞர் எஸ். உதயக்குமார், இறந்த ராஜாவை போலீஸார் அடித்து துன்புறுத்தவில்லை. சாட்சிகள் முன்னிலையிலேயே அவரை போலீஸார் தங்களது ஜாமீனில் விடுவித்துள்ளனர். இதுதொடர்பாக 17 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது, என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஆர். சக்திவேல், "போலீஸாரின் காவலில் இருந்த ராஜாவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டபோது அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லாதது, இறந்த ராஜாவின் மரணம் தொடர்பாக சாட்சிகளின் வாக்குமூலங்களை போலீஸார் மாஜிஸ்திரேட்டிடம் சமர்ப்பிக்காதது, தகனம் செய்ய வற்புறுத்தியது போன்றவை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

புதைக்கப்பட்ட ராஜாவின் உடலை தோண்டியெடுத்து, உரிய விதிகளைப் பின்பற்றி சென்னை மற்றும் திருச்சி மருத்துவக் கல்லூரி தடய அறிவியல் துறை மருத்துவ நிபுணர்களைக் கொண்டு மறுபிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். என உத்தரவிட்டுள்ளார்.

மேலும், ராஜாவின் மரணம் தொடர்பாக முறையாக விசாரணை நடத்த தமிழக அரசின் உள்துறை செயலர், வடக்கு மண்டல ஐஜி, விழுப்புரம் டிஐஜி, எஸ்பி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ள நீதிபதி, விழுப்புரம் தாலுகா காவல் நிலையத்தில் கடந்த ஏப்.9 முதல் 11-ம் தேதி வரை கண்காணிப்பு கேமராவில் பதிவான பதிவுகளை பாதுகாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.